**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 40/2017**
**வழக்கு சாட்சி PW–11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பத்மநாபபிள்ளை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கோலப்பபிள்ளை | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | தச்சநல்லூர் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 10.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :–**

நான் தச்சநல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2016 வருடம் கடையநல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்த போது 12.07.2016 ம் தேதி காலை 6.00 மணிக்கு கடையநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.240/2016 வழக்கு கோப்பினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடமான கடையநல்லூர் அட்டகுளம் தென்பக்கம் உள்ள தனலட்சுமி ரைஸ் மில் பக்கம் சென்று சாட்சிகள் சுப்புராஜ், ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபம் தயார் செய்தேன். அந்த வரைபடம் **அசாஆ. 6** ஆகும். பின்னர் சாட்சிகள் சுப்புராஜ் மற்றும் ராமமூர்த்தி, உதவி ஆய்வாளர் சில்வியாஜாஸ்மின் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் மகேஷ், ராசையா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினம் 7.30 மணிக்கு கடையநல்லூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் முன்னிலையில் இறந்துபோன ராசம்மாள் என்பவரின் பிரேதத்தின் மீது

பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அசாஆ. 7** ஆகும். பின்னர் இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக தலைமை காவலர் கோஸ்துரை மூலமாக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 12.07.2016 ம் தேதி வழக்கில் சம்மந்தப்பட்ட TN 72 N 0888 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை விபத்து ஆய்வு செய்யவேண்டி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். 18.07.2016 ம் தேதி எதிரியை காவல் நிலையத்தின் முன்பு வைத்து கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். 30.09.2016 ம் தேதி எதிரிக்கு பணி நியமனம் செய்த மாரியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பணி நியமன சான்று பெற்றேன். மோட்டார் வாகன ஆய்வாளர் சசி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ரஞ்சித்வினோத் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். அத்துடன் எனது விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 304(A) IPC வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

வரைபடத்தில் சம்பவயிடத்தை சுற்றிலும் குடியிருப்பு வீடுகள் மற்றும் கடைகள் உள்ளதாக நான் குறிபிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த கடை மற்றும் வீடுகளில் உள்ள நபர்களை நான் சாட்சியாக விசாரித்தேன். ஆனால் அவர்கள் முன்வரவில்லை. வரைபடத்தில் இரத்தக்கரை படிந்து

இருந்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாகனத்தை ஒரு நாள் காலதாமத்துடன் ஆய்வு செய்ய அனுப்பியதற்கு காரணம் என்ன என்றால் ஆர்.சி புக் எடுத்து வர காலதாமதம் ஆனது. இந்த விவரத்தை நான் வழக்கில் குறிப்பிடவில்லை. விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு சேதம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அசா.1 என்னுடைய விசாரணையில் அவருடைய அம்மா ரோட்டை கடக்கும்போது இந்த விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரரிடம் இருந்து எந்த புகாரும் பெறவில்லை என்றாலும், நான் புகார்தாரரிடம் கையெழுத்து மட்டும் வாங்கிக்கொண்டு, இந்த வழக்கிற்கு ஏதுவாக பின்னர் புகார் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், பார்வை மகஜர் மற்றும் வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் ஆய்வாளர் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல், எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.19 13:17:26 +0530